## அன்பு இயேசுவின் அன்பு

அன்பு இயேசுவின் அன்பு – அது
அளவிடமுடியாதது
நம்பு நீ அதை நம்பு – இந்த
இகமதில் கிடைக்காதது

தந்தை தாய் அன்பொருநாள் – அது
தணிந்தே போய்விடும் – தன்
பிள்ளையின் அன்பொருநாள் – அது
பிரிந்தே போய்விடும்

என்றென்றும் மாறாதது – என்
இயேசுவின் தூய அன்பு
என் வாழ்வில் தீராதது – என்
தேவனின் ஜீவ அன்பு

கணவனின் அன்பொருநாள் – அது
கரைந்தே போய்விடும் – நல்ல
மனைவியின் அன்பொருநாள் – அது
மறைந்தே போய்விடும்

உறவினர் அன்பொருநாள் – அது
ஒழிந்தே போய்விடும் – உடன்
பிறந்தவர் அன்பொருநாள் – அது
அழிந்தே போய்விடும்

நண்பனின் அன்பொருநாள் – அது
நழுவியே போய்விடும் – நீ
நம்பினோர் அன்பொருநாள் – அது
வழுவியே போய்விடும்